திருத்தியப்பட்டது

செ.கு.எண்: 58 நாள்: 18/06/2011

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை - 18.6.2011

நாமக்கல் மாவட்டம், ராசிபாளையம் கிராமம், மோகனூர் - வளையப்பட்டி சாலையில் கோணவேப்பமரம் என்ற இடத்தில் 15.6.2011 அன்று தங்களது உறவினர் ஒருவரின் இறுதி சடங்கில் கலந்து கொண்டு விட்டு, வீடு திரும்பியவர்கள் பயணித்த வேனும், லாரியும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் அவ்வேனில் பயணம் செய்த ஒன்பது பெண்கள் உட்பட 12 பேர் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயருற்றேன். இந்த விபத்தில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தச் சம்பவத்தில் 19 பேர் காயமடைந்தனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவர்கள் அனைவருக்கும் நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும், மாவட்ட நிருவாகத்திற்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். இச்சம்பவத்தில் காயமடைந்துள்ள அனைவரும் விரைவில் பூரண குணமடைய வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் தலா ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 15,000/- ரூபாயும், சாதாரண காயமடைந்தவர்களுக்கு தலா 6,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்



வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9